- குற்றவியல் மற்றும் உரிமையியல் சார்ந்த பிரச்சினைகளுக்காகப் பெண்கள் இம்மையத்தை நாடலாம்.
- இம்மையம் பாதிக்கப்பட்டப் பெண்ணுக்குத் தங்குமிடம் தேவைப்பட்டால் அதற்கான ஏற்பாடுகளை செய்யும். மருத்துவ உதவிகள் மற்றும் மனநல ஆலோசனை இங்கு வழங்கப்படும்.
- பாதிக்கப்பட்டப் பெண்ணை அடைத்து வைத்தாலோ வெளியில் செல்ல விடாமல் துன்புறுத்தினாலோ இம்மையத்திலிருந்து சென்று மீட்டு வருவார்கள். இம்மையத்தில் உணவு உடை முதலிய வசதிகளுடன் பத்து நாட்களுக்கு தங்க வாய்ப்பு உள்ளது. அதற்கு மேல் உரிய இல்லத்திற்கு அனுப்பப்படுவார்கள்.

## வரதட்சணைக்கு எதிர்த்து குரல் கொடுங்கள்!



**தண்டனை**

- இந்தச் சட்டம் வரதட்சணை வாங்குபவர்களுக்கும், கொடுப்பவர்களுக்கும், அதற்காக உதவி செய்பவர்களுக்கும் சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கிறது.
- வரதட்சணைக் கேட்ட்டால் 6 மாத தண்டனையும் 15,000 ரூபாய் அபராதமும் விதிக்கப்படலாம்.
- வரதட்சணை கேட்டு விளம்பரம் செய்தல் குற்றமாகும். இதற்கு ஆறுமாதம் முதல் ஐந்தாண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கலாம்.

**நீங்கள் என்ன செய்ய வேண்டும்?**

- வரதட்சணை கேட்பதை அல்லது கொடுப்பதை எதிர்த்து குரல் கொடுங்கள்.
- உங்களுக்கு அல்லது உங்களுக்குத் தெரிந்த யாருக்காவது வரதட்சணை தொடர்பான தொல்லைகள் இருந்தால், சட்டத்தின் உதவியை நாடுங்கள்.
- உள்ளூர் அளவில் இயங்கி வரும் நிறுவனங்கள் அல்லது தனித்து வாழும் பெண்களுக்கான செயல்பாட்டு கூட்டமைப்பின் உதவியை நாடுங்கள்.

**மேலும் விரிவான தகவல்களை அறிந்துகொள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும்**

அவசர உதவி எண்கள்

**அரசு உதவி எண்: 181**

**சிறகுகள் உதவி எண்:**

**சிறகுகள்**

**தனித்து வாழும் பெண்கள் செயல்பாட்டுக் கூட்டமைப்பு (SWAN)**

# வரதட்சணைத் தடைச் சட்டம், 1961



**மனித உரிமை மேம்பாடு மற்றும் ஆராய்ச்சி அமைப்பு**

M: +91 8660891451 | E: swan@hrf.net.in | W: hrf.net.in

**அறிமுகம்**

இச்சட்டம் 01 மே 1961 அன்று நடைமுறைக்கு வந்தது. இந்தியாவில் வரதட்சணை கொடுப்பது அல்லது வாங்குவதை தடைசெய்வதே இந்த சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். அனைத்து மதத்தினருக்கும் இச்சட்டம் பொருந்தும்.

இந்த சட்டம் வரதட்சணை தொடர்பான குற்றங்களை தடுப்பதோடு, பெண்கள் திருமண வாழ்வில் பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்கிறது.

**வரதட்சணை என்றால் என்ன?**

- திருமணத்தின் போது மணமகன் அல்லது அவரது குடும்பத்தினருக்கு, மணமகள் குடும்பத்தினர் வழங்கும் பணம், சொத்து அல்லது மதிப்புமிக்க பாதுகாப்புகள் அனைத்தும் வரதட்சணை எனப்படும்.
- இது திருமணத்திற்கு முன்போ, திருமணத்தின் போதோ, அல்லது எந்த ஒரு சமயத்திலோ கொடுக்கப்படலாம்.

**பட்டியல்**

இதன்படி, திருமணத்தின் போது, அன்பளிப்பாக கொடுக்கப்படும், தங்க நகைகள் மற்றும் பாத்திர பண்டங்கள் போன்ற பொருட்கள் குறித்த பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும். மாப்பிள்ளை மற்றும் பெண் வீட்டார் ஆகிய இரு தரப்பினரும் கையெழுத்திட்டு, இதற்கென நியமிக்கப்படும் வரதட்சணை ஒழிப்பு அதிகாரியிடம், ஒப்படைக்க வேண்டும். இதைச் செய்யத் தவறும்பட்சத்தில், ஆறு மாதம் முதல், ஒரு ஆண்டு வரை, சிறைத் தண்டனை வழங்கப்படும்.

**புகார் செய்தல்**

- பாதிக்கப்பட்டவர் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கலாம். அல்லது அவர் சார்பில் மற்றவர்களும் புகார் கொடுக்கலாம்.
- பாதிக்கப்பட்டவர் அல்லது அவரது வழக்கறிஞர் நேரடியாக நீதிமன்றத்தில் புகார் கொடுக்கலாம்.
- மாவட்ட ஆட்சியரிடமும் புகார் கொடுக்கலாம்.
- சட்டப் பணிகள் ஆணைக்குழுவிடம் புகார் கொடுக்கலாம்
- மாநில அல்லது தேசிய மகளிர் ஆணையத்தில் புகார் கொடுக்கலாம்.
- மாவட்ட சமூக நல அலுவலர் இதன் விசாரணை அலுவலராக இருப்பார். புகார்களை இவரிடம் கொடுக்கலாம்.

**ஏற்கனவே வரதட்சணை பெற்றிருந்தால் என்ன செய்வது?**

திருமணத்திற்கு முன்பு அல்லது மணமகள் அல்லாத வேறு எவரேனும் வரதட்சணை பெற்றிருந்தால் ஆறு மாதங்களுக்குள் அதனை சம்பந்தப்பட்ட பெண்ணின் பெயருக்கு மாற்ற வேண்டும். அந்தப் பெண் இறந்துவிட்டால் அவரது வாரிசுகளின் பெயருக்கு மாற்ற வேண்டும்.

**பெண்களுக்கான ஒருங்கிணைந்த சேவை மையம்**



**எந்த அதிகாரியை அணுகுவது?**

மாவட்ட சமூக நல அலுவலர் இச்சட்டத்தின்படி பாதுகாப்பு அலுவலராவார். எனவே, பாதிக்கப்பட்டவர் நேரடியாகவோ தபால் மூலமோ புகார் கொடுக்கலாம். மாவட்ட சமூக நல அலுவலர் இரு தரப்பையும் அழைத்து விசாரிப்பார். தேவையான மன நல மற்றும் குடும்ப நல ஆலோசனைகள் வழங்கப்படும். மேல் நடவடிக்கைக்குப் பரிந்துரை செய்யப்படும்.

**விசாரணை**

திருமணமான பெண் திருமணமாகி ஏழு ஆண்டுகளுக்குள் இறந்தால் அந்த இறப்பு குறித்து கோட்டாட்சியர் விசாரணை நடத்த வேண்டும். இத்தகைய மரண விசாரணையில் இறந்த பெண்ணிடம் எப்போது வரதட்சணை கேட்டிருந்தாலும் இதனை வரதட்சணை மரணமாகக் கருதலாம். குற்றம் உறுதியானால் மரண தண்டனை வரை விதிக்கலாம்.

**பெண்களுக்கான ஒருங்கிணைந்த சேவை மையம்**

- பாதிக்கப்பட்ட பெண்களுக்கு அனைத்து வகையான நடவடிக்கைகளையும் ஒரே இடத்தில் மேற்கொள்ள சகி எனப்படும் ஒருங்கிணைந்த சேவை மையங்கள் அனைத்து மாவட்டங்களிலும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.
- பின்வரும் சேவைகளுக்காக இம்மையத்தை அணுகலாம்:
  - அவசர கால பதிலளிப்பு மற்றும் மீட்பு சேவைகள்
  - மருத்துவ உதவி
  - எஃப்.ஐ.ஆர்/என்.சி.ஆர்/டி.ஐ.ஆர் பதிவு செய்தலில் பெண்களுக்கு உதவி
  - உளவியல்-சமூக ஆதரவு/ஆலோசனை
  - சட்டப்பூர்வ உதவி மற்றும் ஆலோசனை
  - தங்குமிடம்